# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | D.V.C.07/2022 | Date: 06.12.2024 |
| Deposition of Witness for | : | **ம.சா.2** | |
| Name | : | **தங்கவேல்** | |

**குறுக்கு விசாரணை :–**

1) மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2019ம் வருடம், 12ம் மாதம் திருமணம் நடைபெற்றது, தேதி ஞாபகமில்லை. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் பவானி கூடுதுறை கோவிலில் நடைபெற்றது. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் குடும்ப பிரச்சனை இருந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மனுதாரர் கௌரி சொன்னார். அதன்பிறகு, தான் அவர்களுக்குள் இருந்த குடும்ப பிரச்சனையை தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம்.

2) காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர் வீட்டிற்கு சென்று வரதட்சணை கேட்டு மிரட்டினாரா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் நான் அவருக்கு சித்தப்பா உறவு ஆகும். மனுதாரர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/–Thangavel

Sd/–S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.